(6)

सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 14 फिब्रारी, 1994/1916 शक

New Delhi, Monday, 14th February 1994

*புது தில்லி, 1994ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் தேதி, திங்கட்கிழமை*

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

New Delhi.

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி.*

The translation in Tamil of the Partition Act, 1893 (4 of 1893), The Drugs (Control) Act, 1950 (26 of 1950), The Hindu Succession Act, 1956 (30 of 1956), The Employer's Liability Act, 1938 (24 of 1938), The Equal Remuneration Act, 1976 (25 of 1976), The Indecent Representation of Women (Prohibition) Act, 1986 (60 of 1986), The Hindu Minority and Guardianship Act, 1956 (32 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பாகப்பிரிவினைச் சட்டம், 1893 (4/1893), மருந்துப்பொருள்கள் (கட்டுப்பாடு) சட்டம், 1950 (26/1950), இந்து இறங்குரிமைச் சட்டம், 1956 (30/1956), பணியமர்த்துநர்களின் கடப்பாட்டுச் சட்டம், 1938 (24/1938), சமமான பணியூதியச் சட்டம், 1976 (25/1976), மகளிர் தம்மை இழிவுபடுத்திக்காட்டுவதைத் (தடையுறுத்தும்) சட்டம், 1986 (60/1986), இந்து இளவர் நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டம், 1956 (32/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின் படி இவையே தமிழில் அதிகாரஉறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

31/10—1

# இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டம், 1956

(சட்ட எண் 32/1956)

[1956, ஆகஸ்டு 25]

இந்துக்களிடையே இளவர்நிலை மற்றும் காப்பாண்மை தொடர்பான சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கும் தொகுத்து அமைப்பதற்குமான சட்டம்.

இந்தியக் குடியரசின் ஏழாவது ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாக :—

குறுந்தலைப்பு மற்றும் அளாவுகை.

1. (1) இந்தச் சட்டம், இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டம், 1956 என்று வழங்கப்பெறும்.

(2) இது, ஜம்மு—காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும் , இந்தச் சட்டம் அளாவி நிற்கும் ஆட்சி நிலவரைகளைத் தம் நிலைவாழ்விடமாகக் கொண்டு, ஆனால் அவற்றிற்கு வெளியே இருந்து வரும் இந்துக்களுக்கும் பொருந்துறும்.

இந்தச் சட்டம், சட்டம் 8/1890 க்குத் துணை வுறவாக இருக்கும்.

2. இந்தச் சட்டத்தின் வகையங்கள், காப்பாண்மையர் மற்றும் காப்புரிமையர் சட்டம், 1890க்குத் துணைவுறவாக இருக்கும், இதன் பின்னர் தெரிநிலையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, இவ்வகையங்கள் அந்தச் சட்டத்தைத் திறக்குறைவு செய்வதில்லை.

சட்டத்தின் பொருந்துறுகை.

3. (1) இந்தச் சட்டம் பின்வரும் நபர்களுக்குப் பொருந்துறுவதாகும்—

(அ) இந்து சமய வழியில், அதன் நெறியமைவுகள் அல்லது வளர்நெறியங்கள், இவற்றில் ஏதொன்றிலேனும் அடங்கிய வீரசைவராகவோ, லிங்காயத்தாகவோ அல்லது பிரம, பிரார்த்தன அல்லது ஆரிய சமாஜத்தைச் சார்ந்தவராகவோ உள்ள இந்து எவரும்,

(ஆ) சமய வழியில், பௌத்தராக, சமணராக அல்லது சீக்கியராக உள்ள நபர் எவரும் ,

(இ) இந்தச் சட்டம் அளாவி நிற்கும் ஆட்சி நிலவரைகளைத் தம் நிலைவாழ்விடமாகக் கொண்டு, சமய வழியில் முஸ்லீமாக, கிறித்தவராக, பார்சியாக அல்லது யூதராக இல்லாத பிற நபர் எவரும் , ஆனால், அந்நபர், இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், இதில் கூறப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எவற்றைப் பொறுத்தும், இந்துச் சட்ட நெறியின் அல்லது அச்சட்ட நெறியின் பகுதியாக இருக்கும் வழக்கம் அல்லது வழக்காறு எதனின் ஆளுகையிலும் வராதவர் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விளக்கம் : பின்வரும் நபர்கள் நேர்வுக்கேற்ப சமய வழியில் இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் அல்லது சீக்கியர்கள் ஆவர்:

(i) சமய வழியில் இந்துக்களாக, பௌத்தர்களாக, சமணர்களாக அல்லது சீக்கியர்களாக இருக்கும் பெற்றோர் இருவருக்கும் முறை மண வழியிலோ முறைமணமில்லா வழியிலோ பிறந்த குழந்தை எதுவும் ,

(ii) முறை மண வழியில் பிறந்த அல்லது முறை மணமில்லா வழியில் பிறந்த குழந்தையின் பெற்றோர்களில் ஒருவர் சமய வழியில் இந்துவாக, பௌத்தராக, சமணராக அல்லது சீக்கியராக இருந்து, அவர் சார்ந்திருக்கிற அல்லது சார்ந்திருந்த பழங்குடி, சமூகம், வகுப்பினம், குடும்பம் இவற்றில் ஏதொன்றிலும் உறுப்பினராக வளர்க்கப்பட்ட குழந்தை எதுவும் ,

(iii) இந்து, பௌத்த, சமண அல்லது சீக்கிய சமயத்திற்கு மாறிய அல்லது மீண்டும் மாறி வந்துள்ள நபர் எவரும்.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிப்பினும், மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, பிறவாறு பணித்தாலன்றி, இந்தச் சட்டத்திலுள்ள எதுவும், அரசமைப்பின் உறுப்பு 366, கூறு (25)இன் பொருள்வரையினுள் வருகிற பட்டியலில்கண்ட பழங்குடி ஏதொன்றின் உறுப்பினர்களுக்கும் பொருந்துறாது.

(2அ) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒன்றியத்து ஆட்சி நிலவரையான பாண்டிச்சேரியைச் சார்ந்திருந்து, தம் இனமுறைச் சட்டத்தைத் துறந்து, பிரஞ்சு குடியில் சட்டத்தை ஏற்றவர்களுக்கு இந்தச் சட்டத்திலுள்ள எதுவும் பொருந்துறாது.

(3) இந்தச் சட்டத்தின் பகுதி எதிலும் உள்ள ' இந்து ' என்னும் சொல், சமய வழியில் ஒருவர் இந்துவாக இல்லாத போதிலும், இந்தப் பிரிவில் அடங்கியுள்ள வகையங்கள் காரணமாக இந்தச் சட்டம் அவருக்குப் பொருந்துறுகிறவிடத்து, அந்த நபரையும் உள்ளடக்குவதாகவே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

4. இந்தச் சட்டத்தில்,—

(அ) '' இளவர் '' என்பது, பதினெட்டு வயது நிறைவெய்தாத நபர் எனப் பொருள்படும்.

(ஆ) '' காப்பாண்மையர் '' என்பது, இளவரின் உயிருடலையோ அவரது சொத்தினையோ அல்லது உயிருடல், சொத்து ஆகிய இரண்டையுமோ தம் பாதுகாப்பில் கொண்டுள்ள நபர் எனப் பொருள்படும், மேலும் அது

(i) இயலுறு காப்பாண்மையர் ஒருவரையும்,

(ii) இளவரின் தந்தை அல்லது தாயின் உயில்வழி அமர்த்தப் பெற்ற காப்பாண்மையர் ஒருவரையும்,

(iii) நீதிமன்றத்தால் அமர்த்தப்பெற்ற அல்லது விளம்பப்பெற்ற காப்பாண்மையர் ஒருவரையும்,

(iv) காப்புரிமையர் நீதிமன்றத்திற்குத் தொடர்புடைய ஒரு சட்டத்தாலோ அதன் வழியாலோ காப்பாண்மையராகச் செயலுறுமாறு அதிகாரம் அளிக்கப்பெற்ற நபர் ஒருவரையும் உள்ளடக்கும்.

(இ) '' இயலுறு காப்பாண்மையர் '' என்பது, பிரிவு 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள காப்பாண்மையர்களில் எவர் ஒருவரும் என்று பொருள் படும்.

சட்டத்தின் மேலோங்கு செல்திறன்.

5. இந்தச் சட்டத்தில், தெரிநிலையாகப் பிறவாறு வகைசெய்யப் பட்டிருந்தால் அல்லாமல்,—

(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டி முன்பு செல்லாற்றலிலுள்ள இந்துச் சட்டத்தின் வாசகம், விதி அல்லது பொருள்கோள் எதுவும், அல்லது அச்சட்டத்தின் பகுதியான வழக்கம் அல்லது, வழக்காறு எதுவும், இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள பொருட்பாடு எதனையும் பொறுத்து செயல் விளைவு அற்றதாகும்.

(ஆ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டி முன்பு செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதுவும், அது இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள வகையங்களில் எதற்கும் ஒவ்வாதிருக்கிற அளவுக்கு பொருந்துறுதல் அற்றதாகும்.

இந்து இளவரின் இயலுறு காப்பாண்மையர்கள்.

6. ஓர் இந்து ஆண் அல்லது பெண் இளவரின் உயிருடலைப் பொறுத்தும் (கூட்டுக் குடும்பச் சொத்தில் அவனுக்கு அல்லது அவளுக்குள்ள பிரிபடா உரித்தம் நீங்கலாக), அவருடைய சொத்தைப் பொறுத்தும், அவருடைய இயலுறு காப்பாண்மையர்கள் பின்வருவோர் ஆவர் :—

(அ) ஒரு சிறுவனாகவோ மணமாகாத சிறுமியாகவோ இருக்கும் நேர்வில்—தந்தை, மற்றும், அவருக்குப் பின்னர், தாய், ஆனால் ஐந்து வயது நிறைவெய்தாத ஓர் இளவர் வழக்கமாகவே அவருடைய தாயின் கைக்காப்பில் இருந்து வருவார்.

(ஆ) முறைமணமில்லா வழியில் பிறந்த ஒரு சிறுவனாகவோ முறை மணமில்லா வழியில் பிறந்து திருமணமாகாத ஒரு சிறுமியாகவோ இருக்கும் நேர்வில்—தாய் மற்றும், அவளுக்குப் பின்னர் தந்தை ,

(இ) திருமணமான சிறுமியாக இருக்கும் நேர்வில்—கணவன்.

வரம்புரையாக : நபர் எவரும்,

(அ) அவர் ஓர் இந்துவாக இருப்பது அற்றுப் போகுமாயின், அல்லது

(ஆ) அவர் ஓர் ஒடுங்குறைவராகவோ (வானஸ்பிரஸ்தா) ஒரு துறவியாகவோ (யதி, அல்லது சன்யாசி) ஆகிவிடுவதால் இவ்வுலகை முழுமையாகவும் இறுதியாகவும் துறந்துவிடுவாராயின்,

இந்தப் பிரிவின் வகையத்தின்படி ஒரு இளவரின் இயலுறு காப்பாண்மையராகச் செயலுற உரிமை கொண்டவர் ஆகார்.

விளக்கம்.—இந்தப் பிரிவில், "தந்தை" மற்றும் "தாய்" என்னும் சொற்கள் "மாற்றாந் தந்தை" மற்றும் "மாற்றாந் தாய்" இவற்றை உள்ளடக்குவதில்லை.

7. இளவராக உள்ள மகவேற்பு மகனின் இயலுறு காப்பாண்மை, மகவேற்பின்போது மகவேற்புத் தந்தையிடமும், அவருக்குப் பின்னர் மகவேற்புத் தாயிடமும் சென்றடையும். மகவேற்பு மகனுக்கு இயலுறு காப்பாண்மை.

8. (1) ஓர் இந்து இளவரின் இயலுறு காப்பாண்மையர், இந்தப் பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு, இளவரின் நலனுக்கு வேண்டிய அல்லது இளவரின் உரிமைச் சொத்தினைக் கைவரப்பற்றவும் பாதுகாக்கவும் அல்லது பயனுடையதாக்கவும் தேவையான அல்லது தகுமான, உரிய செயல்களைப் புரிவதற்கு அதிகாரம் உடையவர் ஆவார்; ஆனால், காப்பாண்மையர், எந்நேர்விலும், ஒப்பந்தம் வாயிலாக இளவரைத் தனிமுறையில் கட்டுப்படுத்த இயலாது. இயலுறு காப்பாண்மையரின் அதிகாரங்கள்.

(2) இயலுறு காப்பாண்மையர், நீதிமன்றத்தின் முன்அனுமதியின்றி —

(அ) இளவரின் நிலையியல் சொத்தின் பகுதி எதனையும் அடைமானம் வைத்தலோ பற்றுப் பொறுப்புக்கு உட்படுத்தலோ விற்பனை, கொடை, பரிமாற்றம் அல்லது பிறவகை உரிமைமாற்றம் செய்தலோ ஆகாது,

(ஆ) அத்தகைய சொத்தின் பகுதி எதனையும் ஐந்தாண்டுகளுக்கு மேற்படும் ஒரு காலவரைக்கு அல்லது இளவர் உரிமை வயது அடையும் தேதி கடந்து ஓராண்டிற்கு மேற்படும் ஒரு காலவரைக்கு குத்தகைக்கு விடுதல் ஆகாது.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)ஐ மீறுகிற வகையில் இயலுறு காப்பாண்மையர் ஒருவரால் நிலையியல் சொத்து எதுவும் அயலடைவு செய்யப்படுமாயின், அது இளவரோ அவர் மூலம் உரிமை கோரும் ஒருவரோ எடுக்கும் நடவடிக்கையால் தவிர்தகு அயலடைவாகும்.

(4) நீதிமன்றம் எதுவும், இளவருக்குத் தேவைப்பாடு எழும் நேர்விலோ அவரது தெளிநிலையான நலப்பாட்டிற்காகவோ அன்றி, உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் எதனையும் புரிவதற்கு இயலுறு காப்பாண்மையருக்கு அனுமதி அளித்தல் ஆகாது.

(5) காப்பாண்மையர்கள் மற்றும் காப்புரிமையர்கள் சட்டம், 1890 (8/1890) எவ்வாறு அதன் பிரிவு 29இன்படி நீதிமன்றத்தில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பத்தைப் பொறுத்து பொருந்துறுமோ, அவ்வாறே இந்தச் சட்டத்தின் உட்பிரிவு (2)இன்படி நீதிமன்றத்தின் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பத்தைப் பொறுத்தும் எல்லா நிலைகளிலும் பொருந்துறும், குறிப்பாக—

(அ) அவ்விண்ணப்பத்திற்கு இணைவுடைய நடவடிக்கைகள் அந்தச் சட்டத்தின்படி, அந்தச் சட்டத்தின் பிரிவு 4-அ இன் பொருள் வரையினுள் அமையும் நடவடிக்கைகளாகக் கொள்ளப்படும்,

(ஆ) நீதிமன்றம், அந்தச் சட்டத்தின் பிரிவு 31இன் உட்பிரிவுகள் (2)), (3), (4) ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றுவதுடன், அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் உடையதாகும்,

(இ) இந்தப் பிரிவின் உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் எதனையும் இயலுறு காப்பாண்மையர் புரிவதற்கான அனுமதியை மறுக்கும் நீதிமன்றத்து ஆணையிலிருந்து எழும் மேல்முறையீடு, அந்த நீதிமன்றத்து முடிவுகளிலிருந்து மேல்முறையீடுகள் வழக்கமாகச் செய்யப்படும் நீதிமன்றத்திற்கு இடப்படும்.

(6) இந்தப் பிரிவில், ''நீதிமன்றம்'' என்பது, அத்தகைய விண்ணப்பம் செய்துகொள்வதற்குரிய நிலையியல் சொத்து அமைந்துள்ள இடத்தைத் தன் அதிகாரவரம்பிற்குள் கொண்டுள்ள மாநகர உரிமை இயல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் அல்லது காப்பாண்மையர்கள் மற்றும் காப்புரிமையர்கள் சட்டம், 1890 (8/1890)இன் பிரிவு 4-அ இன்படி அதிகாரம் பெற்ற ஒரு நீதிமன்றம் என்று பொருள்படும் ; மேலும், அத்தகைய நீதிமன்றங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்ற அதிகாரவரம்பினுக்குள் அந்த நிலையில் சொத்து அமைத்திருக்குமிடத்து, எந்த நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்குள் அச்சொத்தின் பகுதி எதுவும் அமைந்துள்ளதோ அந்நீதிமன்றம் என்றும் பொருள்படும்.

*உயில்வழி காப்பாண்மையர்களும் அவர்களுக்குற்ற அதிகாரங்களும்.*

9. (1) முறைமணவழிப் பிறந்த இளவர்நிலைக் குழந்தைகளின் இயலுறு காப்பாண்மையராகச் செயலுறும் உரிமைகொண்ட ஓர் இந்து தந்தை, அந்த இளவர்களில் எவர் ஒருவருக்காகவும் அவருடைய உயிருடலைப் பொறுத்து அல்லது (பிரிவு 12இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிபடா உரித்தமல்லாத) அவருடைய சொத்து பொறுத்து அல்லது அவ்விரண்டையும் பொறுத்து, உயில்வழி காப்பாண்மையர் ஒருவரை அமர்த்தலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி செய்யப்பட்ட அமர்த்தம் எதுவும், தாய்க்கு முன்னரே தந்தை இறந்துவிடுவாராயின், செல்திறம் பெறுவதில்லை ; ஆனால் நபர் எவரையும் காப்பாண்மையராக உயில்வழி அமர்த்தாமல் தாய் இறந்துவிடுவாராயின், அது மீண்டும் செல்திறம் பெறுவதாகும்.

(3) முறைமணவழிப் பிறந்த இளவர்நிலைக் குழந்தைகளின் இயலுறு கார்பாண்மையராகச் செயலுறும் உரிமைகொண்ட ஓர் இந்து விதவையும், அவ்வாறு செயலுறுவதற்குத் தந்தை உரிமை இழந்த காரணத்தால், தனக்கு முறைமணவழியில் பிறந்த இளவர்நிலைக் குழந்தைகளின் இயலுறு காப்பாண்மையராகச் செயலுறும் உரிமை கொண்டுள்ள ஓர் இந்து தாயும், அந்த இளவர்களில் எவர் ஒருவருக்காகவும், அவருடைய உயிருடலைப் பொறுத்து அல்லது (பிரிவு 12இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிபடா உரித்தமல்லாத) அவருடைய சொத்து பொறுத்து அல்லது அவ்விரண்டையும் பொறுத்து, உயில்வழிக் காப்பாண்மையர் ஒருவரை அமர்த்தலாம்.

(4) முறை மணமில்லா வழியில் பிறந்த இளவர்நிலைக் குழந்தைகளின் இயலுறு காப்பாண்மையராகச் செயலுறும் உரிமைகொண்ட ஓர் இந்து தாய், அந்த இளவர்களில் எவர் ஒருவருக்காகவும், அவருடைய உயிருடலைப் பொறுத்து அல்லது அவருடைய சொத்து பொறுத்து அல்லது அவ்விரண்டையும் பொறுத்து, உயில்வழிக் காப்பாண்மையர் ஒருவரை அமர்த்தலாம்.

(5) அவ்வாறு உயில்வழி அமர்த்தப்பெற்ற காப்பாண்மையர், இளவரின் தந்தை அல்லது தாய் இறந்த பின்னர் அந்த இளவரின் காப்பாண்மையராகச் செயலுறவும், இந்தச் சட்டத்திலும் உயிலிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்கும், வரையுறுத்தங்களுக்கு உட்பட்ட வகையிலும், இந்தச் சட்டத்தின்படி ஓர் இயலுறு காப்பாண்மையருக்குள்ள உரிமைகளைச் செலுத்தவும் உரிமை உடையவர் ஆவார்.

(6) அவ்வாறு உயில்வழி அமர்த்தப்பெற்ற காப்பாண்மையரின் உரிமை, அந்த இளவர் ஒரு சிறுமியாக இருக்குமிடத்து, அவளுக்குத் திருமணமாவதன்மேல் அற்றுப்போவதாகும்.

*சொத்தின் காப்பாண்மையராகச் செயலுற இளவருக்குத் திறப்பாடின்மை.*

10. இளவர் எவரின் சொத்தைப் பொறுத்தும் காப்பாண்மையராகச் செயலுற மற்றோர் இளவருக்குத் தகுதிறம் இல்லை.

*இளவரின் சொத்தினை நிகழ் நிலைக் காப்பாண்மையர் கையாளுதல் ஆகாது.*

11. இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு, ஆண் அல்லது பெண் நபர் எவரும், ஓர் இந்து இளவரின் சொத்தினை, அந்த இளவரின் நிகழ்நிலைக் காப்பாண்மையர் என்ற முறையில், அயலடைவு செய்யவோ கையாளவோ உரிமைகொண்டவர் ஆகார்.

12. கூட்டுக் குடும்பச் சொத்தில் ஓர் இளவர் பிரிபடா உரித்தம் கொண்டிருந்து, அந்தச் சொத்து அக்குடும்பத்தில் வயதுவந்த உறுப்பினர் ஒருவரின் மேலாண்மையில் இருக்குமிடத்து, பிரிபடா அவ்வுரித்தம் பொறுத்து அந்த இளவருக்காக காப்பாண்மையர் எவரும் அமர்த்தப் பெறுதல் ஆகாது.

கூட்டுக் குடும்ப சொத்தில் இளவரின் பிரிபடா உரித்தம் பொறுத்து காப்பாண்மையர் அமர்த்தப் பெறுதல் ஆகாது.

வரம்புரையாக : இந்தப் பிரிவிலுள்ள எதுவும், அத்தகைய உரித்தம் பொறுத்து காப்பாண்மையர் ஒருவரை அமர்த்த உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரவரம்பைப் பாதிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

13. (1) ஓர் இந்து இளவரின் காப்பாண்மையரென நபர் எவரும் நீதிமன்றத்தால் அமர்த்தப்பெறும்போது அல்லது விரும்பப்பெறும்போது, அந்த இளவரின் நலப்பாடே தலையாய முக்கியத்துவம் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

இளவரின் நலப்பாடே தலையாய முக்கியத்துவம் கொண்டது.

(2) இந்தச் சட்டத்தின் வகையங்களின் பயனாக அல்லது இந்துக்களிடையேயான திருமணத்தில் காப்பாண்மை பொறுத்த சட்டம் ஒன்றின் பயனாக ஓர் ஆணோ, பெண்ணோ காப்பாண்மையராக இருந்து வருவது இளவரின் நலப்பாட்டிற்கு உகந்ததல்ல என்று நீதிமன்றம் கருதுமாயின், அந்தக் காப்பாண்மைக்கு நபர் எவரும் உரிமைகொண்டவர் ஆகார்.